வகையில் இயங்க வல்லது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அந்தப் பகுதியில் ஒரு கொலை அல்லது இயற்கைக்குப் புறம்பான மரணம் ஏற்பட்டு விடுமானால் பிணப் பரிசோதனைக்கு நாங்குநேரிக்குச் செல்லவேண்டிய ஒரு சூழ்நிலை இருக்கிறது. ஆகவே, இயங்கிக்கொண்டிருந்த அந்தப் பிணப் பரிசோதனை அறையை மீண்டும் இயக்குவதற்கு, அதை நன்கு ரிப்பேர் செய்து—ஏன் இயக்கவில்லை என்று கேட்கின்றபோது மேற்கூரை இல்லையென்று சொல்கிறார்கள். பிணத்தை எல்லாம் களவு செய்து எடுத்துச் செல்லக்கூடிய சூழ்நிலை இருக்கிறது; பாதுகாப்பு இல்லை என்று சொல்லுகிறார்கள். ஆகவே. அந்தப் பாதுகாப்புப் பணிகளை மேற்கொண்டு—மேற்கூரையை எல்லாம் நன்கு போட்டு அந்தப் பிணப் பரிசோதனை அறை இயங்குவதற்கு உரிய நடவடிக்கையை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எடுப்பார்களா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-20

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 85 ஆண்டுக்காலம் என்று அந்தக் கட்டிடத்தினுடைய பெருமைக்காகத்தான் சொன்னேன். எனவே, அதைப் பழுதுபார்த்து, அதை வைத்துக்கொள்வதற்கு நிச்சயமாக அரசு முயற்சிகளை மேற்கொள்ளும். நான் ஏற்கெனவே சொன்னபடி, பிணப் பரிசோதனை அறையைச் சீர் செய்வதற்கு, நிதிநிலைமைக்கு ஏற்ப நடவடிக்கை எடுக்கப்படும் என்று நான் தெரிவித்து இருக்கிறேன். எனவே, நிதிநிலைமைகளையெல்லாம் பார்த்து, அதற்கான உரிய நடவடிக்கைகளை, உரிய நேரத்தில் எடுப்போம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 124, திரு. டி. வேலையா, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

124—

அரசு மருத்துவமனைகளில் நோயாளிகளிடம் நுழைவுச்சீட்டுக் கட்டணம் வசூலித்தல்.

***22328*—திரு. டி. வேலையா:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா —

அரசு மருத்துவமனைகளில் நோயாளிகள் நுழைவுச் சீட்டுக் கட்டணம் வசூலிக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு.சு.முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

அத்தகைய திட்டம் எதுவும் பரிசீலனையில் இல்லை.

திரு. டி. வேலையா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மருத்துவமனைகளைப் பொறுத்தவரையில் நாளுக்கு நாள் கூட்டம்

1994 மார்ச் 29]

அதிகமாக வந்துகொண்டு இருக்கிறது. அங்கே வசதியுள்ளவர்களும் வருகிறார்கள்; வசதி இல்லாதவர்களும் வருகிறார்கள். கூட்டம் அதிகமாக இருக்கிற காரணத்தால் தரமான சிகிச்சை அளிக்க முடிவதில்லை. அதிலும் குறிப்பாக, வெளிநோயாளிகளைப் பொறுத்தவரையில்தான் மருத்துவமனைகளில் கூட்டம் அதிகமாக இருக்கிறது. துப்புரவுப் பணிகளும் மிகவும் கஷ்டமான சூழ்நிலையில் இருப்பதால் உள்நோயாளிகளை சரியாகக் கவனிக்க முடியவில்லை. மேலும், நமது புதிய நிதிக் கொள்கையிலும் அரசாங்கம் அளிக்கின்ற சர்வீஸ்களில், மெடிக்கல் சர்வீஸ் உள்பட, தகுதியுள்ளவர்களிடம் நாம் வசூலிக்க வேண்டும் என்கிற கொள்கையை இந்த ஆண்டு முதல் நாம் எடுத்து இருப்பதாக மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் சொன்னார்கள். காசு என்று இருந்தால்தான் பொது மக்களுக்கும் அந்த சர்வீஸிலே ஒரு இன்வால்வ்மெண்ட் இருக்கும். அவர்களும் பொறுப்பை உணர்ந்து நடந்துகொள்கின்ற வாய்ப்பு இருக்கும். ஆகவே, உண்மையான, மருத்துவ வசதி தேவைப்படுகிற மக்கள் அந்த மருத்துவப் பணியை நல்லமுறையிலே பயன்படுத்திக் கொள்கிற வகையில் அங்கே ஒரு ஒழுங்கையும் கட்டுப்பாட்டையும் ஏற்படுத்துகின்ற வகையில் முடிந்த அளவிற்கு ஏதாவது கட்டணம் வசூலிப்பதற்கு அரசால் நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன கருத்துக்கள் அத்தனையும் நூற்றுக்கு நூறு சரியானது என்றாலும்கூட, சாதாரண மக்கள், ஏழையெளிய மக்களுடைய மருத்துவ வசதிக்கு அரசாங்கம் உத்தரவாதம் கொடுக்கவேண்டிய அவசியம் இருக்கிறது. எனவே, அதற்குக் கட்டணம் வசூலிக்க வேண்டுமா என்பதைப்பற்றி, அதுவும் நுழைவுச் சீட்டிற்காக, அதாவது ஓ.பி. சீட்டிற்காக வசூலிக்க வேண்டுமா என்பதைப் பற்றி அரசு அவ்வளவு தீவிரமாக ஆய்வு செய்யவில்லை. ஆனால், அதே நேரத்திலே வருகிற விசிட்டர்ஸ், அதிலும் விசிட்டிங் டைம் முடிந்து, நான்-விசிட்டிங் டைமிலே வரக்கூடியவர்களுக்கு கட்டணம் வசூலிக்கலாம் என்ற ஆய்வு மட்டும் நடந்து கொண்டு இருக்கிறது. அதுபோக, ஏற்கெனவே உள்ள முறையைக்கூட, 500 ரூபாய்க்கு கீழே வருமானம் இருப்பவர்களுக்கு இனாமாகவும், 500 ரூபாய்க்கு மேலே வருமானம் இருப்பவர்களுக்கு ஒரு குறிப்பிட்ட கட்டணம் வசூலிக்க வேண்டுமென்ற முறை இருக்கிறது. அந்த முறையைச் சிறப்பாக அமல்படுத்துவதற்கு நாம் இப்போது நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறோம். மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் தன்னுடைய நிதிநிலை அறிக்கையிலே சொன்னபடி, இதிலே எந்த வகையிலே எல்லாம் வருமானத்தை ஏற்படுத்தி, அங்கே வசதியில்லாமல் வருகிற ஏழை மக்களுக்கு அந்தப் பணத்தைச் செலவழித்து, கூடுதலான, சிறப்பான வசதிகளை எப்படிக் கொடுக்க முடியும் என்பதைப் பற்றி இந்தத் துறை ஆய்வு செய்து கொண்டிருக்கிறது. எனவே, நீங்கள் சொன்ன அடிப்படையிலே, ஆனால் எந்தக் காரணத்தைக்

கொண்டும் சாதாரண மக்கள் பாதிக்கப்படாத அந்தச் சூழ்நிலையிலே, அவர்களுக்கு இன்னும் சிறப்பாக இதன்முலமாக அதிகப் பெரிய சேவை கிடைக்கின்ற வகையிலே இந்தத் துறை நடவடிக்கை எடுப்பதற்கு ஆய்ந்து கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. டி. வேலையா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அஞ்சல் அலுவலகங்களில் மணியார்டர் ஃபார்ம் முதலில் இலவசமாகக் கொடுத்துக் கொண்டு இருந்தார்கள். ஆகவே, போவோர் வருவோரெல்லாம் அந்தப் பாரத்தை வாங்குவதற்கு அங்கே ஒரு பெரிய கூட்டம் இருந்தது. மத்திய அரசாங்கம் அந்த மணியார்டர் ஃபாரத்திற்கு 0.5 பைசா என்று விலை வைத்த பிறகு இப்போது அங்கே கூட்டமே இல்லை. இதுதான் நம் மக்களுடைய மனப்பான்மை. இலவசம் என்றால் எனக்கும் வேண்டும்; என் அப்பாவுக்கும் வேண்டும் என்று சொல்கிற மனப்பான்மைதான் இங்கே இருக்கிறது. காசு என்று சொன்னால், நான் சிறுவன், எங்கப்பா வயதானவர் என்று சொல்கிற சூழ்நிலை நாட்டிலே இருக்கிறது. ஆகவே, காசு என்று வந்தால்தான் மக்களுக்கு அரசாங்கம் செய்கிற சேவையின்மீது ஒரு மதிப்பும் இன்வால்வ்மெண்டும் இருக்கும் என்று கருதப்படுகிறது. ஆகவே, இதைச் சீர் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே சொன்னபடி, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. வேலையா அவர்கள் பல்வேறு சிறந்த உண்மைகளை இன்றைக்கு இங்கே காலையிலே சொல்லியிருக்கிறார்கள். அதிலே கொஞ்சம்கூட மறுப்பதற்கே இல்லை. எனக்கும், என்னுடைய தந்தைக்கும் என்று கேட்டால்கூட பரவாயில்லை, பக்கத்துவீட்டுக்காரனுக்கும் சேர்த்து வாங்கிக்கொண்டு போகிற நிலைமைகூட ஏற்பட்டு விடுகிறது, இனாமாகக் கொடுக்கிறபோது. இருந்தாலும்கூட, அதைக்கூட கொடுக்க முடியாத மக்கள் இருந்துவிடுவார்களோ; அவர்கள் பாதிக்கப்பட்டு விடுவார்களோ என்ற அக்கறையின் காரணமாகத்தான், இந்த அரசு அதிலே மிகக் கவனமாக, மிகத் துல்லியமாக அதைப்பற்றி ஆய்வு செய்து அதற்குப் பின்னாலே இதில் முடிவு எடுக்கவேண்டுமென்று யோசித்துக் கொண்டிருக்கிறது. எனவே, மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் எங்களுக்குக் கொடுத்திருக்கிற உத்தரவே, இதிலே எந்த அளவிற்கு அரசிற்கு வருமானத்தை ஏற்படுத்தி, அந்தப் பணத்தின் மூலமாக மருத்துவமனைகளைச் சிறப்பாகப் பராமரிப்பதன் மூலமாக, சாதாரண ஏழையெளிய மக்கள், பெரிய மருத்துவமனைகளுக்கு, தனியார் மருத்துவமனைகளுக்கு போகவே முடியாத வகையிலே, இருக்கின்ற அந்தச் சாதாரண மக்களுக்கு அந்தப் பணத்தையே செலவழித்து, எந்த அளவுக்கு சிறப்பான மருத்துவச் சேவையைக் கொடுக்க முடியுமோ, அதற்கான நடவடிக்கையை எடுங்கள் என்று சொல்லியிருக்கிறார்கள்.

எனவே. உங்களுடைய கருத்தும் ஆலோசனையில் எடுத்துக் கொள்ளப்படும். அதே நேரத்திலே நான் திரும்பத் திரும்ப திட்டவட்டமாகச் சொல்லியிருக்கிறேன், எந்தக் காரணத்தைக் கொண்டும், சாதாரண ஏழை மக்கள் பாதிக்கப்படாத வகையிலேதான் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 10-25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: டாக்டர் ஜெ. பரந்தாமன்.

டாக்டர் ஜெ. பரந்தாமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் மிகச் சிறப்பான குழந்தைகள் நலத் திட்டம், குழந்தைகளுக்கு இலவச சிகிச்சை என்று பெருமளவில் இலவச சிகிச்சைகள் தமிழ்நாட்டில் மட்டும்தான் மிக அதிகமாக நடைபெறுகிறது. ஒரு ஆய்வு செய்தால், தமிழ்நாட்டில் மட்டும்தான் இப்படி இலவச அறுவைச் சிகிச்சைகளும், இலவச மக்கள் நல்வழ்வுத் திட்டங்களும் மிக அதிக அளவில் செயல்படுவதும் உறுதியாகும். நிதித் தேவைகள் மிக அதிகமாக இருப்பதால், இலவச அறுவைச் சிசிச்சை செய்ய உபகரணங்கள், அறுவைச் சிகிச்சை நரம்பு நூல்—கேட்கட் போன்றவை வாங்க ... (மணியடிக்கப்பெற்றது)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி.

டாக்டர் ஜெ. பரந்தாமன்: தேவை மிக அதிகம் ஏற்படுகிறது. சிகிச்சைகளில் குணம் அடைய மிகப் பலர் கோயில் காணிக்கை செலுத்துதைப்போல, நன்றிக் கடனாக மருத்துவமனைகளுக்கும் பொருளாகவோ, பணமாகவோ தாங்களே, முன் வந்து தந்தாலும் வாங்குவதற்குப் பொறுப்பான அலுவலர்கள் மருத்துவமனைகளில் ஆர்வம் காட்டுவதில்லை. நல்ல மனம் படைத்தவர்கள் நன்கொடை தர முன் வந்தால் வரவேற்று பெற்றுக்கொள்ள ஆணை பிறப்பிக்கப்படுமா? இரசீதுகள் வழங்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர்அவர்களே, இதுவொரு நல்ல யோசனைதான். ஆனால் இதை அனுமதிக்கிறபொழுது ஆங்காங்கே, சில தவறுகள் நடக்கிறபொழுது கெட்ட பெயர் ஏற்படுகிறது. இதிலே ஒரு நூறு சதவீதம் என்று கணக்கு எடுத்துக் கொண்டால், எங்கோ ஒரு சதவீதம், இரண்டு சதவீதம் தவறு ஏற்பட்டு விட்டால் அதையே மிகப் பெரிய தவறு என்று பேசுகிற சூழ்நிலை ஏற்படுகிற காரணத்தால்தான் அந்த 98 சதவீத நன்மை கிடைப்பதைக்கூட நாம் விட்டு விடுகிற ஒரு நிலை ஏற்பட்டு விடுகிறது. இதை அனுமதித்தோமேயானால். சிலயிடங்களிலே தவறுகள் ஏற்படுவதற்கு வாய்ப்பிருக்கிறது. எனவே, அந்தச் சில தவறுகளையே வைத்து இந்தத் துறை முழுவதும் தவறு நடந்து கொண்டு இருக்கிறது என்று

சொல்கிறார்களே என்ற காரணத்தால்தான் அது கை விடப்பட்டது. இருந்தாலும்கூட அங்கே உண்டியல்கள் எல்லாம் வைக்கப்பட்டிருக்கின்றன. அதிலே போடுவார்கள் என்று சொன்னால் அது சிறப்பாக இருக்கும். ஆனால், கோயிலுக்குப் போய் போடுகிறபொழுது அவர்களாகப் போய் போடுகிறார்கள், இலட்சக் கணக்கிலே போடுகிறார்கள். ஆனால், மருத்துவமனைக்கு என்று போகிறபொழுது 500 ரூபாய் கொடுப்பது என்று சொன்னாலும்கூட யோசிக்கிறார்கள். இருந்தாலும் அந்த நடவடிக்கை எடுப்பதற்கு ஆலோசிக்கலாம். இப்பொழுது பெரிய அளவிலே ரவுண்ட்டேபிள், லயன்ஸ் கிளப், ரோட்டரி கிளப் அப்படிப்பட்டவர்களே கூட கட்டிடத்தை நீங்களே கட்டிவிட்டுப் போங்கள் என்று சொல்கிற அளவிற்கு இப்பொழுது நாங்கள் லிபரலாக்கி விட்டிருக்கிறோம். அந்த நடவடிக்கையை அரசாங்கம் தொடர்ந்து மேற்கொள்ளும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 125, திரு. இரா. அப்பு நடேசன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

125—

திருவட்டார் பணிமனையிலிருந்து 89 'வி' விரைவுப் பேருந்தை இயக்குதல்

***20973**—திரு. இரா.அப்பு நடேசன்:*

மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவட்டார் தொகுதியில் திருவட்டார் பணிமனையில் இருந்து இயங்கி வந்த 89 'வி' விரைவுப் பேருந்து நிறுத்தப்பட்டது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், 89 'வி' விரைவுப் பேருந்தை மீண்டும் இயக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) திருவட்டார் தொகுதியில் திருவட்டார் பணிமனையில் இருந்து இயக்கி வந்த 89 'வி' விரைவுப் பேருந்து சாதாரணப் பேருந்தாக மாற்றி இயக்கப்பட்டு வருகிறது.

(ஆ) 'வி' விரைவுப் பேருந்து அனைத்து சாதாரணப் பேருந்து நிறுத்தங்களிலும் நிறுத்தப்படவேண்டும் என்று பொதுமக்களின் வேண்டுகோளின்படி சாதாரணப் பேருந்தாக மாற்றி இயக்கப்பட்டு வருகிறது.

திரு. இரா. அப்பு நடேசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் 'வி' பஸ்ஸை மாற்றி சாதாரண பேருந்தாக விடப்படுகிறது என்று சொன்னதற்கு அவர்களுக்கு நன்றியைத்